01.07.2023

**<u>ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி</u>**

பாளை புஷ்பலதா மெட்ரிக் பள்ளியில் 01.07.2023 அன்று உலக மருத்துவர் தினத்தை முன்னிட்டு மாணவ, மாணவியர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. புஷ்பலதா பள்ளியின் சேர்மன் மற்றும் மருத்துவருமாகிய திருமதி.S.மரகதவல்லி அவர்கள் தலைமை தாங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்கள். பள்ளி முதல்வர் திரு. ஹாரிசன் ஜெபக்குமார் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். நிகழ்ச்சியில் ஊட்டச்சத்துக்களின் பலன்கள் குறித்து தானிய வகைகள் வகைப்படுத்தப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டது. அது குறித்து மாணவ, மாணவியர்கள் விளக்கம் அளித்தனர். மேலும் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரையில் உள்ள மாணவர்கள் அனைவரும் தானிய வகைகளை பார்வையிட்டு அதன் பயன்கள் பற்றி தெரிந்து கொண்டனர். நிகழ்ச்சியை இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், தேசிய பசுமைப்படை, பாரத் சாரண, சாரணியர் இயக்கம், காலநிலைச்சங்கம் ஆகியவற்றின் ஒருங்கினைப்பாளர்கள் திரு.ஜனார்த்தனன், திருமதி.மதிப்பிரியா, திரு.அருமைமிக்கேல் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் செய்திருந்தனர்.

********